# சீனி, மா, பாண் விலை அதிகரிப்பு!

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 21 | தை 7 | ரபி-அவ் 2 | இதழ் 343
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 21-1-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
PERIODICALS DIVISION
1980 -1 -21
RECEIVED

## உடன் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

சீனி, மா, பாண் ஆகியவற்றின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன!

சீனியின் விலை மூன்று ரூபாவிலிருந்து 4-50 சதமாகவும் பாண் ருத்தல் 1ரூபா 35 சதமாகவும் மாவின் விலை ஒரு ரூபா முப்பது சதத்திலிருந்து 1ரூபா 50 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கூ. மொ. விற்பனவு ஸ்தாபனங்களில் விற்பனை செய்யப்படும் புளுங்கல், பச்சை அரிசி ஒரு ருத்தல் ரூ.1-60 சதத்திலிருந் ரூ. 1-78 சதமாகவும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி ஒரு ருத்தல் ரூ. 1-80 சதத்திலிருந்து ரூ. 1-90 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## அதிபர் டிட்டோ கால் அகற்றப்பட்டது

(பெல்கிரேட்)

யுகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவின் இடது

(8-ம் பக்கம் பார்க்க)

★ மிளகாய்; வெங்காயம்: பாவனையாளர், உற்பத்தியாளரை

# பாதிக்காத வகையில் விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்

## அமைச்சர் லலித் கருத்து

– கா. யோகநாதன் –

(யாழ்ப்பாணம்)

"மிளகாய், வெங்காயத்திற்கு விலையை நிர்ணயிக்கும்போது பாவனையாளர்களை மட்டுமல்லாது, உற்பத்தியாளரையும் பாதுகாக்க வேண்டும். இருபகுதியினரையும் பாதிக்காதவகையில் விலை நிர்ணயம் இருக்கவேண்டும்"

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நேற்றுக்காலை விவசாயிகள் உற்பத்தியாளர் மத்தியில் பேசுகையில், வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினர்.

தேசிய விலைநிர்ணயகமிஷன் ஆரம்பமாகுமுன்னர் இக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயகோன் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம், உடுப்பிட்டி எம்.பி. திரு. ரி. ராஜலிங்கம், அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, தேசிய விலைநிர்ணய ஆணைக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### முக்கிய தினம்

அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது:

'வெங்காயத்துக்கும் மிளகாய்க்கும் பாவனையாளரை பாதிக்காதவகையில் தகுந்த விலை நிர்ணயிக்கப்பட இந்த விசாரணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. இன்று சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த தினமாகும். ஏனெனில் உற்பத்தியாளருக்கும் சிறந்தவிலை கொடுக்கப்போகிறது.

"கடந்த 2 வருடகாலமாக மிளகாய்க்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. இவ்விலை பற்றிய கோரிக்கையிட்டு பாவனையாளர் சந்தோஷமடைந்தநேரத்தில், உற்பத்தியாளர் விரக்தியடைந்தனர். இவ் விஷயம்பற்றி வடபகுதி எம். பிக்கள் பலமுறை திரும்பத் திரும்ப எடுத்துக் கூறி வந்துள்ளனர். விலைபற்றி நிர்மானிக்க இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆணைக்குழு விசாரணையின் பின் சிறந்த முடிவைத் தர வேண்டும்.

கொழும்பிற்கு அடுத்ததாக யாழ்ப்பாணத்தில்தான் இக் கூட்டம் நடைபெறுவதால் இன்று முக்கிய நாளாகும்.

### கடந்த காலத்தில்...

கடந்தகாலத்தில் பாவனையாளருக்கு மிளகாய் 40 ரூபாவிற்கு விற்கப்பட்டது. அந்த நிலைக்கு மீண்டும் வருவதை மக்கள் விரும்பவில்லை. அதை மனதில் வைத்து பாவனையாளர்களுக்கு நியாயமான

(8-ம் பக்கம் பார்க்க)

## "தட்டுப்பாடு இல்லாமல் நியாயமான விலையில்..."

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் தற்பொழுது 317 பாவனையாளர் சங்கங்கள் இருக்கின்றன. ஆயிரம் சங்கங்கள் அமைக்கப்பட்ட பின்னர் அகில இலங்கை பாவனையாளர் சங்க சம்மேளனத்தை அமைத்து, அதன்மூலம் மக்களுக்கு பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்"

யாழ். சென் ஜோன்ஸ்கல்லூரி மண்டபத்தில் நடந்த பாவனையாளர் சங்க மாநாட்டில் வர்த்தகக் கப்பல்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

புத்தம் புதியது
ஹொண்டா CD 185 (ரேட் மாஸ்ரர்)
உடன் விற்பனைக்குண்டு
குரூஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
2, புதிய சந்தை - சுன்னாகம். 4724

உ
சிவமயம்

திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான சித்தார்த்தி ஆண்டு தைத் திங்கள் 9-ஆம் நாள் (23-1-1980) புதன்கிழமை காலை 7-45 மணிமுதல் 8-20 வரையுமுள்ள கும்பலக்கின நல்லோரையில்

எமது ஏக புத்திரன் திருவளர் செல்வன் வரதராஜன் அவர்களுக்கும்
எமது ஏக புத்திரி திருவளர் செல்வி சாந்தகுமாரி அவர்களுக்கும்

யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடைபெறும் திருமண விழாவிற்குத் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம், அத்துடன் மணமகன் இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்தில் பங்குபற்றிச் சிறப்பித்தேகுமாறு தங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

வரவேற்பு: மணமகள் இல்லத்தில் 23-1-1980 புதன்கிழமையும்
மணமகன் இல்லத்தில் 24-1-1980 வியாழக்கிழமையும்
பி. ப. 5-00 மணி தொடக்கம் 6-30 மணிவரை நடைபெறும்

தங்கள் நல்வரவை நாடும்

ச. இராசரத்தினம் தம்பதிகள்
'இராஜன் மில்ஸ்,'
புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்.

அ, குமாரசாமி தம்பதிகள்
'அம்பிகை வாசா,'
மூளாய்,
சுழிபுரம்.
4703

உங்கள் தேவைகள் எதுவாயினும் அத்தனையும் நியாயவிலையில் கிடைக்கிறது எம்மிடம்!

விவசாயிகளின் தேவைகளுக்கு:
● நீரிறைக்கும் இயந்திரம் ● இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள்
● தெளிகருவிகள் ● உப உறுப்புக்கள் ● அல்கத்தீன் குழாய்கள்
● கிருமிநாசினிகள் மற்றும் விவசாய உபகரணங்கள்.

உபஉணவுப் பொருட்கள்:
● பூடு ● பயறு ● மிளகு ● கிலிம் (KLIM) பாலுணவு
● நெஸ்டம் (NESTUM) ● ஒவல்ரின் (OVALTINE)
பாவனைப் பொருட்கள்: "கோல்மன்" பெற்றோமாக்ஸ்
கால்நடைகளுக்கு: ● உணவுத்தின் வகைகள்
● சகல மருந்து வகைகள்.

விரைவில் கிடைக்கவிருக்கிறது "ரெக்சின்ட்" தைவான் பைசிக்கிள்கள். விலை ரூபா 750- மட்டுமே. கரியர், ஸ்ரான்ட், பெல், முன்லைட் இனும்.

வர்த்தக விசாரணைகள்:
கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள் உண்டு!

ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம். (ம. ப.)
Sri Lanka Co-op. Marketing Federation Ltd.,

தலைமைக் காரியாலயம்:
"கூட்டுறவுச் சதுக்கம்", 127, கிரான்பாஸ் வீதி, கொழும்பு-14.

கிளை:
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

பிடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்கள் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 21, புதிய மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம். 4692

தேர்ச்சி அடைந்த படப்பிடிப்பாளர் அல்லது பழகிப் படம் பிடிப்பதற்கும் ஆண், பெண் விண்ணப்பிக்கலாம். எவற்றிக் ஸ்ரூடியோ, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. 4713

## விற்பனைக்கு

(Chopper) சொப்பர் சயிக்கில் விற்பனைக்குண்டு. 383 2, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4704

தமிழ், ஆங்கில, தட்டச்சு இயந்திரங்கள் I. C. M. A. Study Pack Books ஆகியன உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். T. V. புளொக் மேக்கிங் இன்டஸ்றீஸ், 355 (A) மேல்மாடி, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 4717

## தவறிவிட்டது

19-ந் திகதி இரவு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் கமரா, பிளாஸ் லைற், கார் லைசென்ஸ், உடுப்புகள் மற்றும் முக்கிய குறிப்புக்கள் ஆகியன அடங்கிய பிரயாணப்பை ஒன்று தவறிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். வே. பாலச்சந்திரன், வீமன்காமம், தெல்லிப்பளை, (இலங்கை வங்கி, வத்தளை) 4722

## கேள்வி கோரல்

ஆறுகால் மடத்தடியில் இருக்கும் வயலை, ஆனைக்கோட்டை மண்ணினால் நிரப்புவதற்கு, கேள்விகள் கோரப்படுகின்றன. ஒரு டிராக்டர், அல்லது லொறிக்கு ஒரு லோட் மண் என்ன விகிதம் என்பதை 28-1-80-க்கு முன் அறிவிக்கவும். த. பொன்னம்பலம், பழம் வீதி, ஆனைக்கோட்டை. 4723

## சிவானந்த சிறுவர் சமயப் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில், சிவானந்தர் மாதர் சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் சிவரனந்தர் சிறுவர் சிறுவர் சமயபாடசாலை இம்மாதம் 16-ம்திகதியிலிருந்து காலையிலும் மாலையிலும் இருநேர வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

## அந்தியேட்டி அழைப்பு



திரு. இ. தாமோதரம்பிள்ளை அவர்கள்
(தொழில் அதிகாரி)
தோற்றம்: 11-01-1934
மறைவு: 23-12-1979

23 - 12 - 1979 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் திரு. இ. தாமோதரம்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22-01-80 செவ்வாய்க்கிழமை நயினாதீவில் நடைபெறும்.

திருமதி
த. தாமோதரம்பிள்ளையும்,
(ஆசிரியை)
பிள்ளைகளும்.

நயினாதீவு,
18-01-80.

4721

## யாழ். பல்கலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வியலின் வளர்ச்சியில் எமது யாழ்ப்பாணத்திற்குத் தனியிடமுண்டென்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

''இன்று பல்வேறு நவீன அறிவியல் துறைகளைத் தமிழிற் கற்பிப்பதுபோல நூலகக் கல்வியும் நெறிமுறையாக எமது நாட்டில் அறிமுகப்படுத்தவேண்டியது அவசியம். பல்கலைக்கழக நூலகங்கள், தொழிற்கல்வி நூலகங்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி நிறுவன நூலகங்கள், உயர் கல்வி நிறுவன நூலகங்கள், பொது நூலகங்கள், அரசாங்கத் திணைக்கள ஆராய்ச்சி நூலகங்கள், தேசிய நூலகம் போன்ற நூலகங்களுக்கு பயிற்சிபெற்ற தமிழ் நூலகர்கள் பலர் தேவைப்படுகின்றனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# தமிழ்ப் பகுதிகளை அரசு பாரபட்சமின்றி அபிவிருத்திசெய்துவருகிறது

## யாழ். மாவட்ட அமைச்சர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ப்பகுதிகளுக்கு அரசு பாரபட்சம் காட்டுவதாக, ஒருசிலர் குறைகூறினாலும், ஒன்றிரண்டைத் தவிர நாட்டின் சகல பகுதிகளையும் அரசு இவருக மத்தது பாரபட்சமின்றி அபிவிருத்திசெய்துவருகின்றது.''

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், யாழ் அரசினர் வைத்தியசாலையில் தன்னியக்க தொலைபேசி இணைப்புப் பணியகத்தை நேற்றுக்காலை திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: யாழ் ஆஸ்பத்திரியின் தொலைபேசி வசதிகளை சீர்செய்வதற்காக சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் நவீன சாதனங்களைக் கொண்ட தொலைபேசி இணைப்புப் பணியகம் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இதனால் யாழ்ப்பாண மக்கள் பயனடைவர். எதிர்வரும் செப்டம்பர் மாதம் நுண்ணலைத்தொடர்பு நிலையம் இயங்கத் தொடங்கியதும் யாழ் மாவட்ட மக்கள் தாம் நினைத்தவுடன் கொழும்புபோன்ற நகர்ப்பகுதிகளில் தொடர்பு கொள்ளலாம்.

''நாம் இன்று அபிவிருத்தியை நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறோம். எல்லோரும் பூரணமாக இந்த இலக்கை அடைவதற்கு நமக்குள் ஒற்றுமை அவசியம், பகைமை பாராட்டியோ பிரிவினை பேசி பிரிந்து நின்றோ அபிவிருததி காணமுடியாது. நாம் இன்னும் பூரணமாக ஒற்றுமையடையவில்லை. நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டு எமது பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

''என்னை யாழ் மாவட்ட அமைச்சராக நியமித்தபோது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா யாழ் மாவட்டத்தில் செய்யக்கூடிய சகல அபிவிருத்திப் பணிகளையும் நிறைவேற்றுமாறு எனக்குப் பணித்தார். அதற்காக ஜனாதிபதிக்கு நாம் நன்றி கூறவேண்டும்.

யாழ் மாவட்ட அரச அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் ''கடந்த இரு தினங்களாக யாழ் மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டுவிழாக்கள் நடைபெற்றுள்ளன. குருநகரில் தொடர்மாடிக் குடிமனைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் தும்புத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய பஸ்சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்று புதிய தொலைபேசி இணைப்புப் பணியகம், யாழ் ஆஸ்பத்திரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் நாம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவைப் பாராட்ட வேண்டும்.

யாழ் மாநகர சபை விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் நன்றியுரை கூறுகையில் இப்பணியகத்தை நிறுவுவதற்குப்பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கி கொடுத்தமைக்கு யாழ் மாவட்ட எம்பிக்களுக்கும் குறிப்பாக யாழ்ப்பாண எம். பி. க்கும், முன்னைநாள் அரச அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டுமென்றார்.

வைபவத்தில்யாழ் மாவட்ட சௌக்கிய சேவை அத்தியட்சகர் டாக்டர் ஆர். அருள் பிரகாசம், யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர்எஸ். அருணாசலம் உட்பட வைத்திய கலாநிதிகள் தாதிகள், சிற்றூழியர்கள் அரச அலுவலர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (கே. இ.)

## யாழ். வந்து திரும்பியது

# சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டேன்

## றொனி டி மெல் தமாஷ்!

(கொழும்பு)

எனது அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்திய காலம் 1975ம்ஆண்டு ஆகும். ஒருநாள் யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற பனம் பொருள் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு அன்றைய அரசைக் கண்டித்து உரை நிகழ்த்தினேன். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பியதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து நான் வெளியேற்றப்பட்டேன். இதை நான் மறக்கவில்லை.

இவ்வாறு நிதி அமைச்சர் திரு. றொனிடிமெல் தெரிவித்தார்.

வடபகுதி சீமெந்து தொழிலாளர்களின் பிரச்னை குறித்து தம்மைச் சந்தித்த தூதுக்குழு முன்னிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தமாஷாகக் கூறினார். (டட்டு.நிரு.-இ)

......

## ஜெகஜீவன் பதவிப்பிரமாணம்

புதுடில்லி,ஜன 20

ஜனதாகட்சித்தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் இன்று திங்கட்கிழமை கூட இருக்கும் 7-வது இந்திய லோகசபையின் புதிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பதற்காக இன்று ஜனாதிபதி திரு.சஞ்சீவரெட்டி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

ஜனாதிபதி மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட திரு. ஜெகஜீவன்ராம் தற்காலிக சபாநாயகராக இருந்து நாளை புதிய உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த பின்னர் புதிய உறுப்பினர்கள் புதிய சபாநாயகரைத் தெரிவு செய்வார்கள். (இ)

......

## வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்

(நெடுந்தீவு)

சாக்கின்தரம்:

| | | |
|---|---|---|
| 2½ புசல் அரிசி இல. | 1 | 489 |
| 140 இரு மாவு பை இல. | 1 | 74 |
| 1 அந். அரிசி இல, | 1 | 385 |
| 2½ புசல் அரிசி இல. | 2 | 602 |
| 150 இரு. மாவு இல. | 1 | 149 |
| நவதானியம் இல. | 1 | 706 |
| சீனி 2 அந். இல. | 1 | 121 |
| உழு | | 450 |
| துண்டுச் சாக்கு | | 06 |
| | | 2982 |

கேள்வி விண்ணப்பத்தின்போது மீளளிப்பு வைப்புப்பணம் ரூபா 300/- உரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால்மூலம், தபாலுறையில் சாக்குக் கேள்விப்பத்திரம் எனக்குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். காரியாலய நேரங்களில் சாக்குகளைப் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 26-1-1980 பிற்பகல் 1 மணி.

தொடர்பு முகவரி,
க. கோபாலபிள்ளை
பொதுமுகாமையாளர்
நெடுந்தீவு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம்
நெடுந்தீவு.

21-01-1980.

4720

## மாவட்ட அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு மாதமாக கோப்பாய் கிராமசபையின் எல்லைக்குட்பட்ட மின்சார விநியோகம் மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்து வருகின்றது. இரவு நேரங்களில் கிடைக்கவேண்டிய மின்சாரம் பகலிலேயே கிடைக்கின்றது. இரவிலே மின்சாரம் ஒழுங்கு பெற இல்லாதிருப்பதால் மாணவர்கள் படிக்கமுடியாத நிலைக்கும் ஆளாகின்றார்கள்

மேற்படி மகஜர் ஒன்றை கோப்பாய்த் தொகுதிமக்கள் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோனுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## வர்த்தகப் பிரமுகர்களுக்கு விசேஷ அழைப்பு

வர்த்தக கப்பற்றுறை அமைச்சினால், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 22-01-80 காலை 9 மணிக்கு வர்த்தக சபையின் அனுசரணையுடன் ஒரு கூட்டம் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வர்த்தக சபையில் அங்கம் வகிக்கின்ற வர்த்தகர்களையும் ஏனைய எல்லாத்துறையைச் சார்ந்த வியாபாரிகளையும் தொழில் நிறுவன அதிபர்களையும் இக்கூட்டத்தில் பங்குகொள்ளும்படி அழைக்கின்றோம். இக்கூட்டத்தில் வர்த்தகம் சம்பந்தமான பிரச்னைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். வர்த்தகத்துறை சார்ந்த மகஜர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். கௌரவ அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அவர்கள் இக்கூட்டத்தில் அரசாங்கத்தின் வர்த்தகக் கொள்கை பற்றி விளக்குவார். இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எல்லா வர்த்தகர்களையும், வியாபாரிகளையும் தொழில் நிறுவன அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

யோகேந்திரா துரைசுவாமி
(மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபரும்)
அரசாங்கச் செயலகம்,
யாழ்ப்பாணம்,
14-01-80.

4008

## கேள்வி விண்ணப்பம்

### உடுவில் மகளிர் கல்லூரி

விடுதி மாணவர் மேல்மாடிக் கட்டிடக் கேள்விகள் 1980 பெப்ரவரி 3-ம் திகதி பிற்பகல் 4 மணிவரை கீழ்க்கையொப்பமுள்ள விலாசத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இக்கேள்விப் பத்திர விபரங்கட்கு எமது கட்டிடப் பொறியியல் ஆலோசகரைத் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்,
உடுவில் மகளிர் கல்லூரி,
சுன்னாகம்.

18-01-1980.

1874

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை இவ்வாண்டு ஆரம்பிக்கப்படும்

## அடுத்து நூலகவியல் அமையும்

### கருத்தரங்கில் உபவேந்தர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் அக்டோபர் மாதம் கல்வித்துறை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதனையடுத்துக் கல்வித்துறையுடன் தொடர்புடைய நூலகக் கல்வியும் விரைவில் தொடக்கிவைக்கப்படும்.''

மேற்கண்டவாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இலங்கை நூலகச் சங்கத்தின் வட பிரதேசக் கிளையினர் நடாத்திய நூலகவியற் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:


''கடந்த தசாப்தங்களில் எமது நாட்டில் இலங்கை நூலகச் சங்கம், களனி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியன நூலகருக்கான பயிற்சிகளை ஏற்படுத்திவந்தன. வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தில் இப்பயிற்சி நெறி சிங்களத்தில் பயிற்றப்பட்டு வருகிறது. அப்பல்கலைக்கழகத்தில் இத்துறையிலே தமிழிலும் பயிற்சியளிக்கப்படும் என்று கூறப்பட்டபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் எந்த வகையிலும் முயற்சி மேற்கொள்ளப்படாதது மனவருத்தத்திற்குரியது. எனவேதான் இந்த இடைவெளியை நிரப்பும் பணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உரியதென்பதனை நான் பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு எடுத்துக் காட்டினேன்.

''இது எனது முயற்சியால் மட்டும் கைகூடாது. இதற்கான சகலவகை ஒத்துழைப்பையும் தேசிய நூலகச் சங்கத் தலைவர் ஜனாப் கமாலுத்தீன், நூலகச் சங்கத் தலைவர் திரு. பீலிக்ஸ் சமரரத்ன, எமது பல்கலைக்கழக நூலகர் திரு. ஆர். எஸ். தம்பையா முதலியோர் இம்முயற்சிக்கு எம்மோடு ஒத்துழைப்பதாக உறுதியளித்துள்ளார்கள்.

''யாழ்ப்பாண மன்னர் ஆண்ட காலத்திலே, எமது பிரதேசத்திலே கல்வி வளர்ந்தோங்கியதற்கான சான்றுகளை எமது வாலாற்று நூல்கள் ஆங்காங்கே எடுத்துக்கூறியுள்ளன. ஆரியச் சக்கரவர்த்திகள் ஆண்ட காலத்தில் நல்லூரிலே தமிழ்ச் சங்கமொன்றினை நிறுவிக் கல்விப் பயிரினை வளர்த்தனர் எமது மன்னர். ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரத்திற் காணப்படும் பின்வரும் குறிப்பு முக்கியமானது.

''சோழ ராஜனால் அனுப்பப்பட்ட அவன் புதல்வன் ஒருவன், இலங்கையாரியச் சக்கரவர்த்தி என்னும் பெயரோடு முடிசூட்டப்பெற்று அரசாண்டான். அவன் தனது இராசதானியாகிய நல்லூரிலே தன்னாட்டிலும், பிற நாட்டிலுமிருந்து பாண்டித்தியம்பெற்ற அறிஞர்களை வரவழைத்து ஒரு தமிழ்ச்சங்கம் தாபித்து, அதற்குச் சர்வ மானியமாக ஒரு கிராமத்து வயல்களையும் கொடுத்தான். இக்கிராமம் இப்போது சங்குவேலி என்னும் பெயரோடு விளங்குகின்றது. அச்சங்கம் புலவர்கள் செய்த நூல்கள் யாவும் இவனால் அமைக்கப்பட்ட சரஸ்வதி மகாலயம் எனப் பெயரமைந்த புத்தகாலயத்தில் வைக்கப்பட்டிருந்தன என்றும் சிங்கள அரசன் ஒருவனால் தீக்கொளுவப்பட்டு அழிந்தொழிந்ததென்றும் சரித்திர நூல் கூறும். அதனாற் போலும் அவர்கள் செய்த நூல்களாயினும், தனிச் செய்யுளாயினும் எனக்குக் கிடைத்தில. சரஸ்வதி மகாலயம் என்ற நூலகம் எமது நூலகப் பாரம்பரியத்தின் ஆரம்பப் பணியை இனங்காட்டுவதொன்று என்பது குறிப்பிடத்தக்கது.

''செகராசசேகரனைத் தொடர்ந்து, பரராஜசேகர மன்னனும் கல்வி வளர்ச்சியில் அதிக ஈடுபாடுகொண்டுதமிழ்ச் சங்க வளர்ச்சியிலும், நூலக விருத்தியிலும் மிகுந்த கவனம் செலுத்தினர். இம்மன்னர் சரஸ்வதி மகாலயத்தைப் புதுக்கி, இந்தியாவிலிருந்து தென்மொழி, வடமொழி நூல்களை வருவித்துப் பலரும் படிக்குமாறு உதவினார். அது மட்டுமன்றிச் செண்பகப்பெருமாள் வெற்றிகொண்டபோது திறுவிய தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பித்துப் புலவர்களையும் வரவழைத்தும், கழகம் அமைத்துச் சன்மானஞ்செய்து தமிழ்ப் பாரம்பரியத்தை வளர்த்தனர்.



''மன்னர் ஆதரவில் வளர்ந்த இந்நிறுவனங்கள் கல்விப் பயிரை எமது பிரதேசத்தில் வளர்த்தன.

''போர்த்துக்கேயரினதும், பின்வந்த ஒல்லாந்தரினதும் கலையழிவுக் கொள்கை எமது பண்டைய பாரம்பரியங்களை அழித்தொழித்துவிட்டன.''

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தைப் பற்றிப் பேசிய உப வேந்தர் பின்வருமாறு கூறினார்.

''யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகத்திலே பாரிய அளவில் நூற்றொகுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே.

''பல்கலைக்கழகத்தின் தேவைக்கேற்ப அறிவுசான்ற நூல்களின் களஞ்சியமாகவும் எமது பல்கலைக்கழக நூலகம் தோன்றுகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்திற் காணப்படும் நூற் செல்வங்களைத் தொகுக்கும் முயற்சியில் எமது பல்கலைக்கழகம் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளமை நல்ல அறிகுறியாகும்.

''யாழ்ப்பாணக் கல்லூரியில் தொகுக்கப்பட்ட ஈழத் தமிழ் நூல்கள், இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அணி செய்கின்றன. எனவே நூலக

(2-ம் பக்கம் பார்க்க)

---

### மணிவாக்கு

''உழைப்புத்தான் வாழ்க்கை என்று உணர்ந்து வேலை செய். அவன் கால்பட்ட இடமெல்லாம் ரோஜா செடிகள் முளைக்கின்றன.

--லத்தீன் பழமொழி

---

## மக்கள் கருத்து

### ஆபத்தை நீக்குங்கள்

நல்லூரில் பருத்தித்துறை வீதியில் உள்ள கல்வியங்காட்டுச் சந்தைக்கு எதிர்ப்புறமாக ஒரு வாய்க்கால் உண்டு. இதன் ஊடாகச் செல்லும் மழை நீர் நல்லூர் கிராமசபைக்குள் உள்ள திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள பூதவராயர் குளத்திற்குச் செல்வது வழக்கம். ஆனால் இம்முறை எதிர்மாறாகக் குளத்து வெள்ளம் வாய்க்காலை நோக்கிவந்து நிற்கிறது. இயற்கைக்கு மாறான நீரோட்டத்திற்கும் வெள்ளத்திற்கும் காரணம், பள்ளத்தை நோக்கி வெள்ளம் ஓடி வந்து நிற்பதேயாகும். பள்ளமாகிய குளத்திலிருந்து வெட்டப்பட வேண்டிய வாய்க்காலை, மாறாக வாய்க்காலின் தொடக்கத்திலிருந்து மிக ஆழமாகத் தோண்டி இடை நடுவில் மாரிகாலம் காரணமாக விடப்பட்டுள்ளது. இதனால் எங்கும் ஓட முடியாது திரிசங்குசொர்க்கத்தில் நிற்கும் வாய்க்கால் வெள்ளம் கறுத்து நிறம் மாறி பலவித நோய்க்கிருமிகள், நுளம்புகளுடன், துர்நாற்றத்துடன் நரகலோகமாகக் காட்சிதருகிறது. அத்துடன் வாய்க்கால் வெட்டும் காலத்தில், கழற்றப்பட்ட வாய்க்கால் மேல் மூடிகள் சில பகுதிகளில் இன்னமும் மூடப்படாது இருப்பதால் அசுத்தங்களும் குப்பைகளும் மேலும் சென்று அசுத்தப்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவற்றை இன்னமும் இக்கிராமசபையின் சுகாதாரப்பகுதிக்குப் பொறுப்பான சுகாதார அதிகாரிகள் பார்த்து நடவடிக்கை எடுக்காது பாராமுகமாக இருப்பது வெட்கத்திற்கும் வேதனைக்கும் உரியது.

அதுமட்டுமல்லாது மேல் மூடிகள் சில பகுதிகளில் மூடப்படாது இருப்பதை அறியாத பொது மக்களுக்கு, இது ஒரு மரணப் பொறியாக இருப்பதை இவ்வாய்க்காலைத் தோண்டத் தொடங்கிய அரசாங்க பொதுவேலைப்பகுதியினரும் நல்லூர் கிராமாட்சி மன்றமும் அறியவேண்டுகிறேன். இப்போது வெட்டப்படாத வாய்க்கால் பகுதிகளில் மழை நீர் வற்றியிருப்பதால் உடனடியாக அவற்றையும் வெட்டி அசுத்த நீரைக் குளத்திற்குப் போகச் செய்து பாலத்தின் மேல் மூடிகளையும் மூடச் செய்து பொதுமக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றவேண்டுகிறேன்.

சே. எஸ். இராஜேஸ்வரன்
ஆடியபாத வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

---

## நாவாந்துறை தாழ்நிலை அபிவிருத்தித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை தாழ்நிலை பிரதேச மீட்சி அபிவிருத்தித்திட்டத்தையாழ் மாவட்ட அமைச்சர்திரு.யு. பி. விஜயக்கோன் நாளை22 ம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பித்துவைக்கின்றார்.

தாழ்நிலைப் பிரதேச மீட்சி அபிவிருத்திச் சபையின் ஆதரவில் இத்திட்டம் செயல்படுகின்றது.

---

## மன்னாரில் கால்நடை அபிவிருத்திப் பண்ணை

(மன்னார்)

''பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது மிகவும் குறைந்தளவு கால்நடைகளே மன்னாரில் உள்ளன, வெளிஇடங்களிலிருந்து நல்ல இன பசுக்களை மன்னாருக்கு வரவழைத்துத் தரும்படி மன்னார் மக்கள் சார்பில் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்''

இவ்வாறு மன்னார் கச்சேரியில் கிராமியக்கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கலந்து கொண்ட கருத்தரங்கில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் கோரிக்கை விடுத்தார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

கிராமிய கைத்தொழில் அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் அமைச்சர் மன்னாருக்கு முதன் முறையாக உத்தியோக பூர்வமாக விஜயம் செய்துள்ளார் அமைச்சரைப் பற்றி நான் சொல்லி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை அவரிடமிருந்து நான் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டுள்ளேன் எனக்கு பீன்பிடித் தொழிலில் அறிவு உண்டு. அவருக்கு தோட்டத்தொழிலில் நிறைய அறிவு உண்டு. அவர் ஒரு சிறந்த அறிவாளி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்.

''கிராமிய கைத்தொழில் அமைச்சை பொறுப்பேற்றதிலிருந்து அமைச்சின் பொறுப்பு வாய்ந்த கருமங்களை மிகவும் சிறந்தமுறையில் திரு.தொண்டமான் செயல் படுத்தி வருகிறார். பின்தங்கிய மாவட்டமான மன்னார் மாவட்டத்திற்கு சிறந்த சேவைகளைச் செய்வார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இப்போது காடுகளெல்லாம் அழிக்கப்பட்டு வயல்கள் செய்வதால் கால் நடைகளுக்கு உணவு கிடைப்பது மிகவும் கஷ்டமாகி விட்டது. கால் நடைகளை மேய்ப்பதற்கு புல் தரைகள் இல்லாததால் கால் நடைகளின் தொகை மிகவும் குறைந்து விட்டது புல்தரைகளை உண்டாக்க வேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் எம். ஈ.எச். மஹ்றூப் தமது உரையில் கூறியதாவது

''புதுவருடம் பிறந்துமுதல் முறையாக கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு.எஸ். தொண்டமான் மன்னாருக்கு விஜயம் செய்துள்ளார். இவரைத் தொடர்ந்து இன்னும் பல அமைச்சர்கள் மன்னாருக்கு விஜயம் செய்வார்கள் முதன் முறையாக உத்தியோக பூர்வமாக மன்னாருக்கு வந்திருக்கும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் இங்குள்ள மக்களின் பிரச்னைகளை நிச்சயம் தீர்த்து வைப்பார். இவர் ஒரு தமிழ் பேசும் அமைச்சராக இருப்பதால் இவருக்கு நிச்சயமாக மன்னாரில் உள்ள பிரச்னைகள் தெரியும் மிகவும் சுறுசுறுப்பான அமைச்சர் இவர் 24 மணி நேரமும் பொதுமக்களுக்காக சேவை செய்பவர் இவர் தொழிலாளருக்காக எத்தனையோ வருடங்கள் உழைத்து வருபவர் அதனால் தான் இவர் இப்போது தொழிலாளர் தலைவனாகத் திகழ்கிறார் இவர் பலதிட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளார் கால்நடை அபிவிருத்திப்பண்ணை ஒன்று மன்னாரில் அமைக்கப்படும். பால் சேகரிப்பு நிலையம் ஒன்றும் அமைக்கப்படும். இந்த பால் சேகரிப்பு நிலையம் தற்காலிகமாக மன்னாரில் அமைக்கப்படும் மன்னார் மாவட்டத்தில் மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்படும் பால் சேகரிப்பு நிலையம் தகுந்த ஓரிடத்தில் நிரந்தரமாக நிறுவப்படும் என்றார்.

---

## யாழ். இந்து த. க. பாடசாலை அதிபர் இடமாற்றத்திற்கு

### அபிவிருத்திச் சங்கம் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரித் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திரு. செ. கனகரத்தினத்தின் திடீர் இடமாற்றத்திற்கு மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆட்சிமன்றக்குழு அண்மையில் உபதலைவர் திரு. சு. சிவகுரு தலைமையில் கூடிய போது திரு. கனகரத்தினத்தின் இடமாற்றத்தைஎதிர்த்து கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த இடமாற்றம் தொடர்பாக யாழ். மாநகரசபை முதல்வரையும், நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினரையும் மேற்படி குழுசந்தித்து இடமாற்றத்தை இரத்துச் செய்து தருமாறுவேண்டியுள்ளது என்றும்---

மேலும் வடமாநிலக்கல்விப் பணிப்பாளர்,நல்லூர் தேசியப் பேரவை உறுப்பினர் கல்வி அமைச்சர் கல்வி ஆணைச் சேவைக்குழுச் செயலாளர் ஆகியோருக்குஇம்மாற்றத்தை ரத்துச் செய்யுமாறு சங்கம் தந்தி அனுப்பியுள்ளது என்றும் சங்கச்செயலாளர் திரு. வே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

(இ)

---

## அனலைதீவில் 'அமிர்' - சூசை- பண்டிதருக்கு இன்றுவரவேற்பு

(வேலணை)

எதிர்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் ஊர்காவற்றுறை எம். பி, பண்டிதர் கா. பொ. இரத்தினம் மன்னார் எம்.பி. எஸ், சூசைதாசன் யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோருக்கு இன்று மாலை அனலைதிவு தெற்கு சனசமூக நிலையத்தினர் வரவேற்பொன்றினை அளிக்கின்றனர்.

திரு. ஐ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர்.

அன்று மாலை 3 மணிக்கு வரவேற்பாளர்கள் அனலைதீவு துறைமுகமேடையில் இருந்து [illegible] வீதிவழியாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசின் நல்ல திட்டங்களை கூட்டணி ஆதரிக்கும்"

## பாடநூல் விநியோக விழாவில் செல்லத்தம்பு எம். பி.

(யாழ்ப்பாணம்)

"மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு நல்ல நூல்நிலையங்கள் அவசியம். அதனுல் ஒவ்வொரு தொகுதியிலும் நல்ல நூல் நிலையங்களும் அறிவு வளர்ச்சிக்குகந்த நூல்களும் இருப்பது அவசியம் எனது தொகுதியில் பல தேவைகள் இருந்தபோதும் மக்களின் அறிவை வளர்க்க வேண்டும் என்று எண்ணி முல்லைத்தீவிலுள்ள நூல்நிலையத்திற்கு 26 ஆயிரம் ரூபாவுக்கு அறிவு நூல்களை வாங்கியுள்ளேன்.

இவ்வாறு யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி மாணவருக்கு இலவச பாடப்புத்தகங்களை வழங்கிய முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ் எம். செல்லத்தம்பு கூறினர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. செல்லத்தம்பு எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியுள்ளது.

"தனியார் பாடசாலையில் கல்விபயிலும் ஐம்பதாயிரம் மாணவர்களுக்கும் இலவச பாடபுத்தகம் விநியோகிப்பதையிட்டு மகிழ்ச்சியடையாமலிருக்கமுடியாது. நான் சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவன்-யாழ்ப்பாண மாவட்டத்திலேயே முல்லைத்தீவுத் தொகுதி அடங்குகின்றது. இரண்டும் ஒரே மாவட்டப் பிரிவுக்குள்ளேயுள்ளன. என்னை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் புத்தக விநியோகத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டனர். யாழ். சம்பத்திரிசியார் பாடசாலையினரும் கேட்டனர். முல்லைத்தீவு மக்கள் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரிக்குச் செல்லும்படி கூறி வழியனுப்பினர்.

### அரசின் திட்டம் புரியவில்லை

"என்ன காரணத்திற்காக அரசு இத்திட்டத்தை ஆரம்பித்தோ தெரியாது. ஆனுல் வாழ்க்கைச் செலவு கூடிய இவ்வேளையில் பொது மக்களுக்கு ஒரு வழியிலாவது உதவி செய்யவேண்டுமென எண்ணியதாலேயே இவ்வுதவியையாவது செய்யவேண்டும் என்று அரசு நினைத்தது போலும்"

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது சுமார் 125 தனியார் பாடசாலைகள் இயங்கிவந்தன. அவை தனியாகவே தமது நிர்வாகக் கடமைகளை மேற்கொண்டன. ஆனுல் இப்போது 25 தனியார் படசாலைகள் வரையில்தான் இருக்கின்றன.

1965 - 70 ம் ஆண்டுகளில் ஆட்சிக்கு வந்த யு. என். பி. அரசாங்கம் தனியார் பாடசாலைகளுக்கு உதவி செய்வதாக கூறி ஆட்சிக்கு வந்த ஆனுல் கூறியபடி உதவிசெய்யவில்லை. ஆனுல் இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் தான் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம்பளம் வழங்க முன்வந்தது,

### கூட்டணி--அரசு உறவு நிதானமானது

தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்கள் அரசுடன் ஒன்றுசேரப் பாராளுமன்றம் செல்லவில்லை. தமிழ் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஏனைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குமாக அரசாங்கம் எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவோம்.

"அரசின் செயல்கள் சிறுபான்மையினருக்கு விரோதமாக இருக்கும்போது அதை எதிர்க்கிறேம். நிஹால்ஜெயவிக்கிரமாவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டபோது அதை எதிர்த்தோம். அவர் ஒரு அரசியல் வாதியல்ல. அரச ஊழியன் அரசியல்வாதியைத் தண்டிக்கலாம். அரசியல் வாதியின் கட்டளையை நிறைவேற்றியவனுக்கு இத் தண்டனையா எனப் பாராளுமன்றத்தில் கேட்டோம் என்றுர்'

இக்கூட்டத்திற்கு வண. பிரான்சிஸ் ஜோசேப் அடிகள் தலைமைவகித்தார். திரு. ஜி. அருளானந்தம் பாராட்டுரை வழங்கினர். வண. யேசுநேசன் அடிகள் நன்றியுரை கூறினர், (கொ)

# "புதியசமுதாயத்தை உருவாக்குவதில் சனசமூக நிலையங்கள் முன்னேடியாக திகழவேண்டும்"

## -- சாவகச்சேரி எம். பி.

(மட்டுவில்)

"புதியதோர் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப எமது கிராம அபிவிருத்திச்சங்கங்கள் சனசமூகநிலையங்கள் என்றும் முன்னேடியாகத் திகழவேண்டும்".

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் மட்டுவில் சோமாஸ்கந்தா சனசமூக நிலையத்தாரின் பொங்கல் விழாவிலும், அதிர்ஷ்ட லாபச்சீட்டு பரிசளிப்பு விழாவிலும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போது கூறினர்.

நிலையதலைவர் திரு. என். குணவீரசிங்க தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

ஆயுர்வேத டாக்டர் பீ. பிலிப்ஸ் ஜே. பி., ஆர். கே. எஸ். இன்டஸ்றீஸ், அதிபர் திரு. கனகலிங்கம் உட்பட பலர் இதில் கலந்துகொண்டு அதிர்ஷ்டலாபச் சீட்டிற்கான பரிசில்களையும் அன்பளிப்புச் செய்தனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:

"சூரியன் ஒருசமதர்மவாதி, காற்று, மழை போன்ற இயற்கையேசமதர்மத்தைப் போதிக்கின்றன. ஆனுல் தத்துவத்தை இலட்சியமாகக்கொண்ட மனிதன் மட்டும் இயற்கையின் தத்துவத்தைச் சிந்திப்பதில்லை. பொங்கல் விழாவும் இந்த அடிப்படையிலேயே நடைபெறுகிறது. ஆகவே தொழிலால், சாதியால் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றி புதியதோர் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப இப்பொங்கல் விழா புதியதோர் திருப்பத்தை உண்டாக்கும் என்றுர்.

# மட்டக்களப்புஅபிவிருத்திக்கு 2 மாத அவகாசம் தாருங்கள்

## பிராந்திய அமைச்சர் கேட்கிறுர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்திச் செய்ய 2 மாதம் அவகாசம் தாருங்கள். அதற்குள் உங்களது ஆலோசனைகளின்படி மாவட்டம் அபிவிருத்திசெய்யப்படும்.

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை தெரிவித்தார்.

மட்டக்களப்புத் தொகுதி அபிவிருத்தி ஆலோசனை மட்டக்களப்பு கன்னியர் மடப் பாடசாலையில் கூட்டணியைச் சேர்ந்த திரு. சாம் தம்பிமுத்து, திருமதி கலாதம்பிமுத்து உட்பட பல கூட்டணி ஆதரவாளர்களும் பல கிராமமக்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துசொண்டனர்.

அமைச்சர் மேலும் பேசுகையில், நல்ல ஆலோசனைகளைத் தந்துள்ளீர்கள். ஆலோசனைகளைத் தந்தவுடன் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்காதீர்கள். 2மாதம் அவகாசம் தாருங்கள் அவற்றை நிறைவேற்றி விடுகிறேன் என்று கூறினர். ( )

# மட்டுநகர் நெற்களஞ்சிய அடிக்கல்நாட்டு விழா இன்று

(மட்டக்களப்பு)

சர்வதேச அபிவிருத்தி இலங்கை-அமெரிக்க முகவர்கள் ஆதரவில் மட்டக்களப்பில் அமைக்கப்படஇருக்கும் நெற்களஞ்சியங்களுக்கான அடிக்கல் நாட்டுவிழா இன்றும் நாளையும் நடைபெறும்.

வீரமுனை, ஒலுவில் சித்தாண்டி ஆகிய இடங்களிலேயே இக்களஞ்சியங்கள் அமைக்கப்படவுள்ளன.

விவசாயஅபிவிருத்தி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இவற்றுக்கான அடிக்கல்லை நாட்டிவைப்பார்.

பிரதேசஅபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை, நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனுப் ஏ. ஆர். எம். மன்சூர், அம்பாறை மாவட்ட அமைச்சர் திரு. பி.தயாரத்ன, மின்சக்தி நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ஜனுப் எம். ஏ. அப்துல் மஜீத் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொள்வர். (இ)

# கோர்ட் செலவுடன் விடுதலை

(மாவிட்டபுரம்)

லொறியின் இலக்கத் தகட்டில் குளறுபடிசெய்து சீமெந்து பெற முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை மல்லாகம் நீதிபதி 25 ரூபா நீதிமன்றச் செலவு கட்டுமாறு உத்தரவிட்டுவிடுதலைசெய்தார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த எஸ். செல்லையா என்பவர் தமது லொறி இலக்கத் தகட்டின் மீது வேறொரு இலக்கத் தகட்டை இட்டு, காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து பெற முயற்சித்தபோது பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கண்டு பிடிக்கப்பட்டுக் காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

மல்லாகம் நீதிபதி முன் அவர் ஆஜர்செய்யப்பட்ட சமயம் 25 ரூபா நீதிமன்றச் செலவு கட்டுமாறு நீதிபதி அவரை விடுதலைசெய்தார். (அ)

# "குடும்பங்கள் சிறப்புற்றுல் சமுதாயம் சிறப்புறும்"

(யாழ்ப்பாணம்)

"புனிதசெபஸ்தியார் தனது உயிருக்கு அஞ்சாது இறை பணியிலும் பொதுவாழ்விலும் தன்னலமறுப்போடு ஈடுபட்டார். இதனுலேயே இறைவன் அவரைப் புனிதராகச் சிறப்பித்தார். இன்று அவரின் திருநாளைக்கொண்டாடும் நாமும் கிறிஸ்துவுக்காக எமது உயிரைக்கொடுக்காவிடினும் எமது வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்களையாவது நன்மனதோடு ஏற்று நடந்து புனித செபஸ்தியாரின் முன்மாதிரியைப் பின்பற்றி தன்னலமறுப்போடு வாழ்வோம்."

இவ்வாறு யாழ் கடற்கரை வீதி புனிதசெபஸ்தியார்ஆலய வருடாந்த உற்சவத்தில் அருளுரையாற்றிய அருட்திரு சகாயமேரிஅடிகள் கூறினர். அவர் மேலும் பேசுகையில்,

"தன்னலமறுப்பை முதலில் வீடுகளில் எமது குடும்பங்களில் பயிற்றுவிக்கவேண்டும். குடும்பங்களில் பன்னித்து மறந்து வாழநாம் பழகவேண்டும். குடும்பங்கள் சரியாக அமைக்கப்படின் சமுதாயம் தானுகவே சிறப்பானமுறையில் அமைந்து சிறப்புறும்" என்றுர். (கி)

# அருந்ததி படைக்கும் விருந்து!

ஆக்கத் திறனுக்கு முக்கியத்துவமளித்து, கொழும்பில் ஓர் இசை நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிறு மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இசை நிகழ்ச்சிகள் அமைப்பாளரான திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் இந்நிகழ்ச்சியைத் தயாரித்து அளிக்கின்றுர்.

ஏற்கனவே இத்தகைய நிகழ்ச்சிகள் சிலவற்றை அளித்திருக்கிறுர் அருந்ததி.

மேடையில் ஐம்பது வீணைகள் ஜாதிபேத தாளவகைகளில் அதாவது, வெவ்வேறு தாளங்கள் வெவ்வேறு சம்பூரண ராகங்களில் இசைக்கப்படுகின்றன,

கிரகபேதம் செய்து சில வீணைகள் ஒலிக்கின்றன.

கருநாடக இசையின் இத்தகைய சாஸ்திரீய செய்முறைகளுடன், கருநாடக, ஹிந்துஸ்தானி இசைகளை பொதுவான ராகங்கள் சிலவற்றை, உதாரணமாக ஹிந்தோளம்-மால்கோஷ், சுபபந்துவராளி-தோடி, பூர்விகல்யாணி-கல்யாணி என்பவற்றை ஆலாபனை செய்கிறுர்கள். 'சங்கீத பூஷணம்' என். பத்மலிங்கமும் 'சங்கீத அலங்கார்' சாந்தி கீததேவும்.

கருநாடக தில்லானவும், ஹிந்துஸ்தானி தரனவும் ஒலிக்கின்றன.

தந்தி வாத்தியங்களான தென்னிந்திய வீணை, வட இந்திய சிதார், மேலைத்தேய கிற்றுர் என்பன இணைந்து இசை எழுப்புகின்றன.

பிரபல இசையமைப்பாளர்களான ஷெல்ரன் பிரேமரத்னவும், கண்ணன்-நேசமும் ராகம்-தானம்-பல்லவி இசைக்கிறுர்கள்.

ஆக்கபூர்வமான முயற்சிகள் அரிதான, அல்லாவ்டின் அத்தகைய பெயரில் 'கோமாளித்தனங்கள்' சில மேற்கொள்ளப்படுகின்ற இவ்வேளையில் அருந்ததியின் முயற்சியைப் பாராட்டலாம். ஆனுல் அவரது படையலின் சுவையை, அதனை அருந்து முன்னரே எப்படிக் கூறுவது?

விருந்தை இலவசமாகவே தான் படைக்கிறுர் அருந்ததி.

---அவதானத்தோடு! அருந்தினுல் என்ன கஷ்டம்?

---மாலி

# கண்டனத் தீர்மானம்

[பண்டத்தரிப்பு]

"அரசாங்க ஊழியர்களின் விடுமுறைத் தினங்களை அரசாங்கம் குறைத்ததை ஆட்சேபிக்குமுகமாக அமைதியான முறையில் மறியல் போராட்டம் நடாத்திய தொழிற்சங்கத் தலைவர்கள் மீதும், தொழிலாளர்கள் மீதும் தாக்குதல் நடாத்தி வன்செயல்களை கட்டவிழ்த்து விட்டதை எமது இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கக் கிளை வன்மையாகக் கண்டிக்கின்றது"

இவ்வாறுன தீர்மானமொன்று, அண்மையில் நடைபெற்ற இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கக்கிளையின் விசேட செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிளைத் தலைவர் திரு. கு. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இத் தாக்குதல் சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக விரைவில் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# "இலவச படநூல் வழங்கிய ஒரே நாடு"

[புத்தூர்]

"உலகத்தில் இலவச நூல்களை மாணவர்களுக்கு வழங்கிய ஒரேயொரு நாடு இலங்கையே என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் செயற்கரிய செயல் நிகழ்வதற்கு மூலகாரணராயிருந்த பெருமைக்குரிய நம் ஜனுதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன மக்கள் மனதில் என்றும் வீற்றிருப்பார்"

மேற்கண்டவாறு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் நிகழ்ந்தஇலவச நூல் விநியோக விழாவில் பேசிய கல்லூரி அதிபர் திரு. க. கனகராசா கூறினர்.

கல்லூரியின் சிரேஷ்ட தமிழாசிரியர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கினர்.

கல்லூரி ஆசிரியர் திரு. க. சாம்பமூர்த்தி, புத்தகங்களைப் பேணவேண்டிய தன் இன்றியமையாமையைக் குறிப்பிட்டுப் பேசினர்.

மாணவர்கள் சார்பில் செல்வி த. பிரேமா நன்றியுரை கூறினர்.

# இலவச...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளுக்கு இலவசமாகக் கிடைக்கும் புத்தகங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், அவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் அக்கறையாக இருத்தல் வேண்டும்."

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வீ. சே. ஈசுரபாதம் நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இந்திய--பாக்.

# டெஸ்ட் தொடரில் இந்தியா வெற்றி

### 5-வதுடெஸ்டில் கபில்தேவ்சிறந்தவீரர்

சென்னை, ஜன.20

சென்னையில் நடைபெற்ற 5-வது கிரிக்கெட்டெஸ்டில் இந்தியா 10 விக்கட்டுகளால் பாகிஸ்தானை வெற்றியீட்டிய தன் மூலம் இந்திய-பாக் 6 டெஸ்ட் தொடரிலும் வெற்றியீட்டியுள்ளது.

இத்தொடரில் இதுவரை நடந்துமுடிந்த 5டெஸ்ட்களில் இந்தியா பம்பாயிலும், சென்னையிலுமே வெற்றிபெற்றுள்ளது. பெங்களூர், டில்லி, கான்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

சென்னை டெஸ்டின் வெற்றிக்கு இந்திய இளம் வேகப் பந்துவீச்சு வீரர் கபில்தேவின் அபார ஆட்டமே காரணமாகும்.

முதல் இன்னிங்ஸில் 90 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றிய இவர் 2வது இன்னிங்ஸில் 56 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். இறுதிநாளான இன்று வீழ்ந்த 3 விக்கட்டுகளையும் இவரே கைப்பற்றினர். முதல் இன்னிங்ஸில் இவர் 84 ஓட்டங்களைப் பெற்றிருந்ததுகுறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக இவருக்கே சிறந்த விளையாட்டுவீரருக்கான பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

7 விக்கட்டுகளை இழந்து 178 ஓட்டங்களைப்பெற்றிருந்த நிலையில் இன்றைய ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் பகல் போசன இடைவேளைக்கு 15 நிமிடங்களுக்குமுன்னர் சகல விக்கட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து ஆடிய இந்தியா விக்கட் நஷ்டமின்றி 77 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் விபரம்: பாகிஸ்தான் 272,233. இந்தியா;430, 77-0. (இ)

# யாழ். மாவட்டத்தில்
# உயர்கல்விதரத்தைஉயர்த்த கல்வியதிபதி நடவடிக்கை

(புலோலி)

யாழ் மாவட்டத்தில் கல்விப் பொதுத்தாரதர உயர்வகுப்புகளில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகளை வடமாநிலக்கல்வியதிபதியும் யாழ் பிரதேசக் கல்வியபிவிருத்திச் சபையின் செயலாளருமாகிய திரு. தி மாணிக்கவாசகர் மேற்கொண்டுவருகிறர்.

இதற்கு முன்னேடியாக உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் ஒன்பது பிரிவாகப் பிரிக்கப்பட்டு, பாடசாலைகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான வெவ்வேறு விஷயங்கள் பற்றி ஆராயப்பட்டன. உயர்தர வகுப்புக்களுக்கான பாடத்திட்டம், நேர அட்டவணை, உயர் வகுப்புகளின் வசதிகள், ஆங்கிலம் கற்பித்தல், உயர் வகுப்புகளைப் பரிசீலித்தல். ஆசிரியர் செய்முறை வேலைகள், விஞ்ஞான நூதனசாலை, மாணவர்களின் வரவு, உயர்தரப் பரீட்சைகள் ஆகிய ஒன்பது விஷயங்களைப் பற்றி அவ்வப் பிரிவுக் குழுக்கள் ஆராய்ந்து, யாழ். பிரதமக் கல்வியதிகாரி திரு. சிவபாதம் தலைமையில் தொண்டமானுறு விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் அவை பற்றிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## "வட்டு. தொகுதிக்கு 1000 வீடுகளாவது தேவை" — எம். பி.

(சங்கானை)

"வீடு, குடிநீர், மின்சாரம் போன்றவை இன்று பொதுவாக உள்ள பிரச்னையாகும். அதில் முக்கியமானது வீடில்லாப் பிரச்னையே. இது இன்று ஓர் அளவில் தீர்க்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்".

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற சங்கானை பட்டினசபை மன்றத்தினுலும் அராலி கிராமசபை மன்றத்தினுலும் கட்டப்பட்ட வீடுகள் குடியிருப்பாளருக்கு கையளிக்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

வலி. மேற்கு உதவி அரசாங்க திரு. அ. செந்தில்வடிவேல் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

சம்பிரதாய முறைப்படி மங்கள விக்கேற்றிவைத்த எம். பி. இரு உள்ளூர் ஆட்சி மன்றங்களினுலும் கட்டப்பட்ட வீடுகளுக்கான உறுதிகளை அவற்றுக்குரியவர்களுக்குக் கையளித்தபின் பேசுகையில், தொடர்ந்து கூறியதாவது:

'வட்டுக்கோட்டைத் தொகுதியில் வீடில்லாப்பிரச்னைமிக முக்கியமானது. [illegible] ஆயிரம் வீடுகளாவது கட்டப்படவேண்டும் என்பது எமது விருப்பம். ஆனல் அரசு 300 வீடுகள் மட்டும் தற்பொழுது கட்டச் சொர்க வழங்கியுள்ளது.

எமது தொகுதியில் நிலவும் குடிநீர் மின்சாரம் போன்ற [illegible] களையும் தீர்க்க [illegible] முகப்படுத்தப்பட்ட பரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு [illegible] ள்ளேன், சங்கானைச் சந்தைக் கட்டிட நிர்மாணிப்பைச் சங்கானை [illegible] நோ. கூ. சங்கம் பொறுப்பேற்றுள்ளது. விரைவில் இது நிறைவேறும். இதனைத் தொடர்ந்துதொகுதி அபிவிருத்திக்கு எங்கெங்கு அத்தியாவசியமான தேவைகள் உண்டோ அவைகள் கூடியவிரைவில் தீர்ப்பதற்கு ஆவன செய்யப்படும். இதற்கு மக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பு அவசியம்''

வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. செந்தில்வடிவேல் கூறியதாவது: நாட்டில் குடியிருக்க வீடற்ற மக்களுக்கு நல்வாழ்வளிக்க வேண்டும் என்ற திட்டத்தை உருவாக்கிய பிரதமரே உள்ளூர் ஆட்சி மன்றங்களை நிர்வகிம்பவருமாவர். அவரின்செயல் திட்டத்திறனினுல் இன்று நாடு பூராவும் உள்ளூர் ஆட்சி மன்றங்களினுலும் அரசினுலும் கட்டப்பட்ட இருபத்தோராயிரம் வீடுகள் குடியிருப்பாளருக்கு கையளிக்கப்படுகின்றன. இதனை மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். எனவே அரசு மேற்கொள்ளும் நல்ல திட்டங்களை நிறைவுபடுத்தி அதன் பலாபலனை மக்கள் பெறுவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும்''

மற்றும் வடபகுதி திட்டமிடல் அதிகாரியும் சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவருமான திரு. சி. லோகேஸ்வரன் யாழ் மாவட்ட நிர்வாகப் பொறுப்பதிகாரியான உ. அ. அதிபர் திரு. எம், சுப்பிரமணியம் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. பொ. சிவகுரு சங்கானை ப. ச. விசேட ஆணையாளர் இ. குணிகாசலம் ஆகியோரும் உரையாற்றினர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ)

## இன்று திறப்பு விழா

(வேலணை)

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டிடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காவலூரர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களினுல் திறந்துவைக்கப்படவுள்ளது.

இப்புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. நா. பொன்னம்பலம் தலைமை தாங்குனர். வடமாகாண கல்வி அதிபதி மாணிக்கவாசகர் மங்கள விளக்கை ஏற்றி வைப்பார். வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திருபொன்கணேசன்கல்விப்பகுதியின் பொதுஜனத் தொடர்புகள் அதிகாரி திரு. செ. நல்லையா ஆகியோர் உட்படப் பலர் சிறப்புரையாற்றுவர். பாடசாலைஅபிவிருத்திச்சங்கத்தைச் சேர்ந்த திரு. அ. தயாபரராசா நன்றிதெரிவித்துப் பேசுவார். (அ)

......

## பச்சிலைப்பள்ளியில் இலவசப் பயிற்சி புத்தக விநியோகம்

[யாழ்ப்பாணம்]

பச்சிலைப்பள்ளிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் பகுதியைச் சேர்ந்த முகமாலைக் கிராம அபிவிருத்திச் சங்கம் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி சங்க அங்கத்தவர்களுக்கும், முகமாலைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் இலவசமாக பயிற்சிப் புத்தகங்களும் மாங்கன்றுகளும் வழங்கப்பட்டது.

இந்த வைபவத்தில் பரந்தன் ப. க: அதிகாரி திரு. ஆ. தங்கராசா, பச்சிலைப்பள்ளிக்கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. சி. குமாரசாமி, கிராம சேவையாளர் திரு. பொ. குமாரசாமி பாடசாலை அதிபர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

......

## மண்ணெண்ணை முத்திரை கிடைக்கவில்லையாம்

(புலோலி)

அரசாங்கத்தினுல் வழங்கப்படும் இலவச மண்ணெண்ணை முத்திரை பெறத்தகுதியுள்ள சிலருக்குப் பருத்தித்துறை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவில் இம் மண்ணெண்ணை முத்திரை வழங்கப்படவில்லையாம்.

எனவே அவர்கள் இம் மண்ணெண்ணை முத்திரையைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பருத்தித் துறைப் பாவனையாளர் சங்கச் செயலாளர் திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இம் மண்ணெண்ணை முத்திரைகள் முடிவுற்றமையாலேயே இம் முத்திரைகள் முடிவுற்றமையாலேயே இம்முத்திரை அவர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதாகவும், மின்சாரவசதிகள் இல்லாத இக்கிராமப் பகுதி மக்கள் இதனுல் பலத்த கஷ்டம் அனுபவித்து வருகிருர்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

## மட்டுவில் பகுதியில் மூளை மலேரியா

(மட்டுவில்)

மட்டுவில் பகுதியில் மூளை மலேரியா நோய் பரவியுள்ளதாக இந்த மலத்தியோன் மருந்து தெளிப்பதில் சுகாதாரப்பகுதி சுறுசுறுப்பாக இயங்குவுள்ளது.

மட்டுவில் தெற்கில் மடத்தடி என்னும் இடத்தில் மூளை மலேரியா சுமார் 2 வீதம் பரவியுள்ளது என்று கண்டு பிடித்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து இந்த இடத்தில் சுமார் ஒரு மைல் சுற்றுவட்டத்திற்கு மலத்தியோன் நுளம்பெண்ணை அடித்து வருகிருர்கள்.

இதைத்தொடர்ந்து இந்த இடத்தில் சுமார் ஒருமைல் சுற்று வட்டம் கிராமசபை நகரசபை வட்டாரங்களையும் உள்ளடக்கியுள்ளது.

## இன்று மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் முதுபெரும் நாதஸ்வர வித்துவான் சங்கீத வித்வமணி என். எஸ். உருத்திராபதியின் பேரனும் மிருதங்க வித்வான் திரு. வி. சின்னராசா, சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதன் ஆகியோரின் சிஷ்யனுமாகிய செல்வன் தர்மராசா (கண்ணன்) வின் மிருதங்க அரங்கேற்றம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சி வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு தலைமை வகிப்பார்.

சிறப்பு விருந்தினராக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கலந்துகொள்கிருர்.

நாதஸ்வர கான கலாநிதி திரு. என். கே. பத்மநாதன் இசைஞான திலகம் திரு. ஆர். இராதாகிருஷ்ணன்' லயஞான கலாநிதி திரு. என். குமரகுரு தவில் இளவரசு திரு. ஆர். புண்ணியமூர்த்தி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்குகொள்கின்றனர். (இ)

......

## தவறணையில் நடந்த பொங்கல் விழா

(மட்டுவில்)

தவறணையிலும் தைப்பொங்கல் விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சீவல் தொழிலாளர்கள் பாவனையாளர் ஒன்றிணைந்து, சமதர்மக் கொள்கையின் அடிப்படையில் இந்தவிழாவை விமரிசையாகக் கொண்டாடினர்.

மட்டுவில் பகிழடி வளவுத் தவறணையிலேயே இந்த விழா எடுக்கப்பட்டது. பிரபல மரக்காலை அதிபர் திரு. வல்லிபுரம் மயில்வாகனம் இதற்குத் தலைமை தாங்கி விழாவை நடாத்தினுர்.

......

## பாவனையாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் பாவனையாளர் சங்கம் யாழ். மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு உதவி அதிகாரி திரு. செ. எஸ். வேல்முருகுவினுல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் திரு. வேல்முருகு பேசுகையில், வியாபாரிகள் தவறிழைக்கும் பட்சத்தில் தமக்கு அறிவித்தால் பொதுமக்களின் சாட்சியம் கூட இல்லாது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும், அதே வேளை வியாபாரிகளும் பாவனையாளர்களும் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ளாது ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்றும் பாவனையாளர் சட்டம் சகலருக்கும் புரியும்படியும், தெளிவாகும்படி விளக்கம் கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (கொ-அ)

## "இலக்கிய வளர்ச்சியில் துறவிகளின் பங்கு

(உடுப்பிட்டி)

கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த துறவிகள் உலகின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள மக்களின் மொழியில் பாண்டித்தியம் பெற்று அம் மொழிகள் மூலம் அம்மக்களுக்கும் போதனை செய்தது மட்டுமன்றி அவர்களின் இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். இத்தாலிய மதகுரு ஒருவர் தமது பெயரை வீரமாமுனிவர் எனத் தமிழில் மாற்றி தேம்பாவணி' என்னும் இறவாத புகழுடைய காப்பியத்தை தமிழுலக்கு அளித்தார் கால்ட்வெல் ஒப்புலக்கணம் எழுதினுர். போப் ஐயர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இவ்வாறு சகோதரி மேரிபிடலினுவுன் வெள்ளி விழா வைபவம் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெற்றபோது உரையாற்றிய சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

வண பிதா அ. ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (அ)

......

மடுஉற்சவம்:

## வீடுகளுக்கு முன்கூட்டியே விண்ணப்பிக்குக

(உடுப்பிட்டி)

இவ்வருடம் மடுத் திருப்பதியில் நடைபெறவுள்ள விழாக்காலங்களில் கலந்து கொள்ளச் செல்லும் யாத்திரிகர்களின் அங்கு தங்கியிருப்பதற்கு தேவையான வீடுகளையோ குடிசைகளையோ விழாக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே விண்ணப்பித்து ஒழுங்கு செய்து கொள்ளுமாறு மடுப்பரிபாலகர் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களால் நிராகரிக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் அதிமுக அரசு தமிழகத்தில் தொடர்ந்து பதவியிலிருக்க நியாயமில்லை

## திமுக செயற் குழு கருத்து

(சென்னை, ஜன.20

'லோகசபைத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அ.தி.மு.க.வுக்கு தமிழகத்தில் தொடர்ந்து பதவியிலிருக்க எதுவித நியாயமும் இல்லை.'

இவ்வாறு தி.மு.க. மத்திய செயற்குழு தெரிவித்துள்ளது.

நேற்று சென்னையில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலை குறித்து ஆராயப்பட்டது.

இந்திராகாங்கிரஸ் கட்சி தி.மு.க.வுக்கு வழங்க முன்வந்துள்ள லோகசபை உபசபாநாயகர் பதவியை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்துமுடிவுசெய்யும்பொறுப்பை தி.மு.க.பாராளுமன்றக்குழுவிடமே விட்டுவிடுவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## பல்கேரிய கப்பல்பேர ஊழல்விவகாரம்

பல்கேரிய கப்பல்பேர ஊழல் விவகாரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு புதிய மத்தியஅரசை தமிழக அரசு கோரவேண்டும் என்று தமிழக அரசைக்கேட்டுக்கொள்வதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## கருணாநிதி டில்லிசெல்கிறார்

சென்னை, ஜன. 20

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி நாளை அல்லது நாளை மறுதினம் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்திப்பதற்காக புதுடில்லி செல்கிறார்.

......

## மீண்டும் தலைவர்

(புதுடில்லி ஜன 20

ஜனதா கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் மீண்டும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (இ)

ஆப்கானில் ரஷ்ய தலையீடு

# சோவியத்-சீன அமைதி பேச்சுவார்த்தை நிறுத்தம்

## ரஷ்ய நடவடிக்கைகள் உலக அமைதிக்கு ஊறுவிளைவிக்கும் என்கிறார் சீன அதிகாரி

பீக்கிங், ஜன.20

சோவியத்-சீன அமைதிப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்தவருடம் அக்டோபரில் இருநாடுகளுக்குமிடையே முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபின் இவ்வாண்டு ஆரம்பத்தில் 2வது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக இருந்தது.

இப்போது ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் படைகள் நிலைகொண்டிருப்பதனால் ஏற்பட்ட நெருக்கடியை அடுத்து 2வது சுற்றுப்பேச்சுவார்த்தைகள் இப்போது ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இன்றைய நிலையில் இப்பேச்சுவார்த்தைகளினால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லையென்றும் இதன்காரணமாகவே இப்பேச்சுவார்த்தைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன என்றும் சீன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### உலக அமைதிக்கு ஆபத்து

ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத்படைகளின் ஊடுருவல் உலகஅமைதிக்கும் சீனாவின் பந்தோபஸ்துக்கும் ஊறுவிளைவிக்கும் என்றும் அந்தஅதிகாரி கூறினார்.

## புதுவை சட்டசபை ஜன.25ல் கூடும்

புதுச்சேரி, ஜன.20

புதுச்சேரி சட்டசபையின் முதலாவது கூட்டம் இம்மாதம் 25-ந் திகதி நடைபெறும் என லெப்டினன்ட் கவர்னர் குல்கர்ணி தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் புதிய உறுப்பினர்கள் பதவிஏற்பதோடு புதிய சபாநாயகர் தெரிவும் இடம்பெறும். (இ)

......

## கேரளமாநில சட்டசபைத்தேர்தல் இன்று

திருவனந்தபுரம், ஜன. 20

கேரளமாநில சட்டசபைத் தேர்தல் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இம்மாநிலத்தின் 140 தொகுதிகளிலும் 602 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுள் 304பேர் சுயேச்சை வேட்பாளர்கள்.

7கோடியே 32 லட்சம் வாக்காளர்கள் புதிய அரசைத் தெரிவுசெய்வார்கள். (இ)

## புதுவைமுதல்வர் டில்லி செல்கிறார்

புதுடில்லி, ஜன.20

புதுச்சேரி முதல் அமைச்சர் திரு.டி. இராமச்சந்திரன் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடனும் மற்றும் தலைவர்களுடனும் பேச்சுநடத்தும் பொருட்டு இன்று திங்கட்கிழமை புதுடில்லி செல்கிறார். (இ)

## பதவிமோக அரசியலைவிட்டு விலகப்போகிறாராம் சி. எஸ்.

### இந்திராவை நீதிமன்றம்முன் நிறுத்தக்கூடாது என்றும் கூறுகிறார்

சென்னை, ஜன.20

பதவிமோக அதிகார அரசியலிலிருந்து தாம் விலகப்போவதாக இந்திய பழம்பெரும் அரசியல் வாதியும் முன்னாள் இந்திய நிதிஅமைச்சருமான திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அரசியலில் தமது நிலை குறித்து அவர்விடுத்த அறிக்கையில் மேலும் கூறியதாவது:-

கடந்த தேர்தலில் மக்களின் அமோக ஆதரவைப்பெற்று பதவிக்குவந்துள்ள திருமதி இந்திராகாந்தியை அவரது முன்னைய ஆட்சியில் அவர் செய்ததாகக்கூறப்படும் செயல்களுக்காக் நீதிமன்றத்தின்முன் நிறுத்துவது முரண்பட்ட விஷயம். அது ஒரு தர்மசங்கடமான நிலையைத் தோற்றுவிக்கும்.

திருமதி இந்திராகாந்திக்கும் மற்றும்சில அரசியல்வாதிகளுக்கும் எதிராக நடத்திய விசாரணைக்கமிஷன் நடவடிக்கைகள் யாவும் கைவிடப்பட வேண்டும். (இ)

......

## ரஷ்ய தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, ஜன 20

ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கல்கத்தாவில் உள்ள சோவியத் யூனியன் தூதுவராலயத்திற்கு முன்னிலையில் சுமார் 3 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர் என அறிவிக்கப்பட்டது. (இ)

......

## இந்திரா ராஜினாமா

புதுடில்லி, ஜன 20

திருமதி இந்திரா காந்தி தமது ராய்பரேலி தொகுதி லோகசபை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திருமதி காந்தி ஆந்திராவில் உள்ள மெதக் தொகுதி லோகசபை உறுப்பினராகத் தொடர்ந்து இருப்பார்.

ராய்பரேலி தொகுதிக்கான இடைக்காலத் தேர்தல்அடுத்த மாதம் 24ம் திகதி நடைபெறும். (இ)

## இன்றைய பலன்

தை மாதம் 7-ம் திகதி
திங்கட்கிழமை
(21-1-1980)

மேடம்: பணவிவகாரத்தில் அபிப்பிராயபேதங்கள் தோன்றக்கூடும், குடும்பக் கவலை தென்படும், பிதாவழிப் பிணிக்குமிடமுண்டு, சுமாரான தினம்.

இடபம்: உறவுகள் பலப்படும், உள்ளத்தில் உவகை துள்ளும், உயர்வுக்கும் வழி பிறக்கும், உவப்பானதினம்.

மிதுனம்: கன்னியர் உறவு காதலுக்கு இடமளிக்கும், மதத் தொடர்பான காரியங்களில் இடமளிப்பீர்கள், தொழில் விடயமும் சீர்பெறும்.

கடகம்: வீணான வார்த்தைகளால் மனம் புண்படும், சொந்தத் தொழில் புரிவோர் நிதான புத்தியுடன் இருக்கவும், பிரிவு நிலையும் ஏற்படலாம்

சிங்கம்: கடமையில் நாட்டம், இல்லத்தில் கலகலப்பு தென்படும், நிதான பேச்சு மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடித்தரும், களஸ்திர சுகமுமுண்டு.

கன்னி: அன்னியர் மத்தியில் நிதானத்துடன் பழகவும், கடமையில் சோர்வுக்குமிடமுண்டு, தனிவழி நாட்டத்தை தவிர்த்துக்கொள்ளவும்.

துலாம்: நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள், புண்ணிய காரியத்தால் பொருட் செலவுமுண்டு, வாழ்க்கையிலும் ஒற்றுமை மலரும்.

விருச்சிகம்: புதிய சாதனைகள் உருவாகலாம், திருப்திகரமான இடமாற்றமும் ஏற்படலாம், கடற்றொழில் செய்வோர்க்கு திருப்திகரமான தினம்.

தனுசு: எதிலும் புதுமையான எண்ணங்கள் தலைகாட்டும், பொருள்வளத்தில் வளமான திருப்பம் காணப்படும், சிலருக்கு தலைமைஸ்தானமும் கிடைக்கலாம்.

மகரம்: கொடுக்கல் வாங்கல் மூலம் பண நெருக்கடி ஏற்படமுடியும், தானிய நஷ்டத்திற்குமிடமேற்படலாம், எதினும் பொறுமையைப் பேணவும்.

கும்பம்: அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும், மற்றவர் விடயத்தில் தலைப்போடவேண்டாம், தொழிலும் மந்தநிலையை அடையும்.

மீனம்: அரசியல்வாதிகள் போற்றப்படுவர், சிநேகிதரால் கொண்டாட்டங்களும் இடம்பெறலாம், குடும்பவழிச் சுகச்செய்தியும் கிடைக்கலாம்.

சேதிடக் கலாநிதி
**திருமலை**
**க.வேலுப்பிள்ளை**


**களைகளை ஒழிக்கச் சிறந்த வழி**

**பவர்ஸ் எம்.சீ.பீ.ஏ.40**

கமக்காரரே! உங்கள் வயலில் நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் கிடச்சி, நீர்முள்ளி, மும்மூட்டுக்கோரை, சந்தனக்கோரை ஆகியவற்றையும் கட்டுப்படுத்த, விதைத்து அல்லது நாற்று நட்டு 21 - 35 நாட்களுள் பவர்ஸ எம்.சீ பீ ஏ. 40 பாவியுங்கள்.




இறக்குமதியாளர்கள:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
62, ஜெத்தவன வீதி, கிரான்ட்பாஸ்,
கொழும்பு 14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மட்டும்
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா
நடித்த
**அந்தமான் காதலி**
நாளை முதல் கலைஞர் கருணாநிதியின்
**பூம்புகார்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30, 6-15, 9-45.
சிவாஜி, சுஜாதா, நாகேஷ், விஜயகுமார்
**தீபம்**
வெள்ளிவிழாச்சித்திரம்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா,
ஜெய்கணேஷ், அசோகன்
**தாயில்லா குழந்தை**

2-வது ஜனசமுத்திர வாரம்
**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P m.
JAMES COBURN. Potrays a man with a mission...
gathering a team of SKYRIDING daredevils to rescue a kidnapped wealthy American family!!
They soared from the skies to stage the most daring rescue ever filmed!
**SKY RIDERS**
See...the most exciting, dangerous and fastest Air drama...FULL OF ACTION Co-starring: SUSANNAH YORK...ROBERT CULP and CHARLES AZNAVOUR
Color byDELUXE
குறிப்பு :- காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கற்றுக்கு முந்துங்கள்.

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
5-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் **சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
**எங்கள் தங்க ராஜா** (புத்தம்புதிய பிரதி-கலர்)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 4-15, 7-00, 9-30
போன்: 7693
**Z an Hound of Dracula**

**ராணி** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி மங்கையர் கூட்டம் மடை திறந்த வெள்ளம் போல் அலை மோதும் காரணம் யாதோ?
மங்கையர் திலகம் சாவித்திரியுடன்
நாகேஸ்வரராவ்
சந்து நடித்த
**தேவதாஸ்** தான் காரணம்
காட்சிகள் குறித்த நேரத்திற்கு முன்பே தொடங்குவதால் தங்கள் ரிக்கட்டுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642 தினசரி 4 காட்சிகளிலும்
"அறிஞர் அண்ணாவின் இறுதியாத்திரை பவனி" எம். ஜி. ஆர். மற்றும் பிரமுகர்கள் சகிதம் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நேர்முக வர்ணனையில்.
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**டாக்ஸி டிரைவருடன்** காண்பிக்கப் படுகின்றது.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

760வது தேசிய சுவீப்முடிவுகள் வருமாறு:-

**முதலாவது பரிசு**

**23 E 0501**

ரூபா 1,00,000

**இரண்டாவது பரிசு**

**21 T 0747**

ரூபா 40,000

**மூன்றாவது பரிசு**

**20 O 0291**

ரூபா 10,000

தலா 1795 ரூபா 50 சதம் ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 09 A 0568 | 22 A 0457 |
| 24 A 0741 | 27 A 0891 |
| 18 B 0156 | 21 B 0178 |
| 23 B 0902 | 29 B 0261 |
| 30 B 0033 | 30 B 0081 |
| 35 B 0524 | 36 B 0989 |
| 02 C 0576 | 04 C 0813 |
| 16 C 0900 | 12 D 0206 |
| 15 D 0886 | 26 D 0027 |
| 31 D 0358 | 32 D 0774 |
| 06 E 0102 | 07 E 0196 |
| 18 E 0027 | 23 E 0664 |
| 06 F 0826 | 10 F 0314 |
| 13 F 0120 | 09 G 0646 |
| 23 G 0288 | 25 G 0921 |
| 26 G 0371 | 29 G 0421 |
| 30 G 0878 | 36 G 0512 |
| 07 H 0252 | 10 H 0381 |
| 12 H 0927 | 14 H 0101 |
| 27 H 0303 | 33 H 0325 |
| 05 J 0320 | 10 J 0[illegible]01 |
| 22 J 0033 | 22 J 03[illegible]5 |
| 17 J 0346 | 24 J 0345 |
| 05 K 0896 | 08 K 0154 |
| 13 K 0919 | 14 K 0750 |
| 31 K 0664 | 09 L 0509 |
| 14 L 0747 | 32 L 0054 |
| 06 M 0554 | 14 M 0183 |
| 34 M 0889 | 28 N 0524 |
| 19 O 0910 | 23 O 0184 |
| 24 O 0419 | 24 O 0676 |
| 11 P 0811 | 18 P 0595 |
| 25 P 00[illegible] | 29 P 0007 |
| 31 P 0105 | 21 Q 0574 |
| 04 R 0497 | 16 R 0720 |
| 21 R 0387 | 21 R 0648 |
| 04 S 0716 | 06 S 0678 |
| 17 S 0151 | 19 S 0995 |
| 21 S 0959 | 03 T 0934 |
| 24 T 0983 | 15 U 0346 |
| 16 U 0303 | 24 U 0104 |
| 30 U 0564 | 29 V 045[illegible] |
| 31 V 0176 | [illegible]2 W 02[illegible]3 |
| 20 W 0942 | 25 W 0671 |
| 04 X 0[illegible]16 | 16 X 0419 |
| 01 Y 0303 | 16 Y 0330 |
| 19 Y 0914 | 25 Y 05[illegible] |
| 35 Y 0808 | 02 Z 002[illegible] |
| 08 Z 0789 | 13 Z 052[illegible] |
| 20 Z 0[illegible]64 | 30 Z 007[illegible] |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

**ஹரன்** யாழ்ப்பாணம்
முத்துராமன் - விஜயகுமாரி
ஸ்ரீதரின்
**கொடிமலர்**
(புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - வாணிஸ்ரீ
**ஊருக்கு உழைப்பவன்**

**வெஸ்லி**
(யானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
[illegible]
**உலகம் [illegible]**

# "கன்னங்கராவும் ஜனாதிபதியும் இலவச பாடநூல் திட்டத்தின் அடிநாதமாய் அமைந்தவர்கள்"
## -- மாணிக்கவாசகர்

(நயினாதீவு)

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட இலவச பாடப் புத்தக விநியோக விழா கோலாகலமாக நடைபெற்றது.

புங்குடுதீவு வட்டாரக்கல்வி அதிகாரி திரு. க. குகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்விஅதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

திரு. மாணிக்கவாசகர் பேசுகையில் இலவசக்கல்வியின் தந்தையான சேர். சி. டபிள்யூ கன்னங்கராவின் தூரதிருஷ்டியும் ஜனாதிபதியின் மதிநுட்பமும் இந்நிகழ்ச்சிக்கு அடிநாதமாய் அமைந்ததைக் குறிப்பிட்டு மாணவர்கள் தமக்கு அளிக்கப்படும் புத்தகங்களைப் தேசியச்சொத்தாகப் பேணிப்பாதுகாக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை முன்னாள் அதிபர் திரு. வே. சிவலிங்கம் சமாதான நீதிபதி திரு. வே. கந்தையா ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

# "இலவச பாடநூல் விநியோகம்: ஏழை மாணவர்களுக்கு வரப்பிரசாதம்"

(யாழ்ப்பாணம்)

"மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் வழங்க அரசு எடுத்த நடவடிக்கை சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த சம்பவமாகும். எத்தனையோ ஏழைப் பிள்ளைகள் புத்தகங்களை வாங்க முடியாமல் வருடம் முழுவதும் காலம் கடத்தும் நிலை இருந்தது. இந்த நிலை பகிரங்கப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மேல் வகுப்பு மாணவர்களுக்குக்கூட இருந்தது. அரசாங்கம் இலவசமாகப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்குவதன்மூலம் மேற்குறித்த கஷ்டம் மாணவர்களுக்கு நீங்கியுள்ளது. பெற்றோர்களுக்கும் பணம் கொடுத்துத் தம் பிள்ளைகளுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கும் பெருஞ்சுமை நீங்குகிறது. அரசாங்கம் புத்தகங்களை இலவசமாக மாணவர்களுக்கு வழங்க முன்வந்தமை பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாகும்."

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு இலவசப் புத்தகம் வழங்கிய விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், நலன் விரும்பிகளும் சமூகமாயிருந்த இக்கூட்டத்தில் திரு. அ. பஞ்சாட்சரம் மேலும் பேசுகையில், "அரசாங்கம் தரும் புத்தகங்களை எமது சொந்தப் பொருள் கொடுத்து வாங்கிய புத்தகங்களைப்போலப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். பாடவிதானத்தில் உள்ளபடி சகல புத்தகங்களையும் வழங்க அரசாங்கம் மேலும் நடவடிக்கை எடுத்துவருகிறது. 1980ம் ஆண்டு தை மாதம் 18ம் திகதி கல்விச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான நாள்" என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ஜீ. இரத்தினவேல், திரு. அ. க. த. கிருஷ்ணராசா ஆகியோரும் பேசினர்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசாவும் கலந்துகொண்ட இவ்விழாவில் எண்ணூறுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டன. (அ)

# "இலவசப் புத்தகங்களை அலட்சியம் செய்யாதீர்"
## மாணவருக்கு உடுப்பிட்டி எம். பி. புத்திமதி

(உடுப்பிட்டி)

"இலவசக் கல்வி அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். மாணவர்கள் தம் எதிர்காலத்தை மனதிற் கொண்டு கல்வியில் அதிக கவனமும், ஊக்கமும் செலுத்தவேண்டும். மாணவர்கள் அரசாங்கம் இலவசமாகத்தானே புத்தகங்களை வழங்குகின்றது என்று கருதி அலட்சிய மனப்பான்மையுடன் பாடப் புத்தகங்களைப் பாவிக்கக் கூடாது."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தில் பாடசாலை மாணவருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்கும் வைபவத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"ஒரு நாட்டின் அபிவிருத்தி, முன்னேற்றம் என்பன அந்நாட்டின் இளைஞர்களின் வழிநடத்தலிலேயே தங்கியிருக்கிறது என்பது உலகம் அறிந்த உண்மையாகும்.

வசதி படைத்த ஒரு சிலரது உரிமையாக மாத்திரம் கல்வி இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடனேயே 1948-ம் ஆண்டில் காலஞ்சென்ற முன்னாள் கல்வி அமைச்சர் திரு. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா இலவசக் கல்வி அமுல் படுத்தப்பட்ட பின்னர்தான் கல்வி சகல மக்களினதும் சொத்தாக மாறியது. இதனால் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கூட உயர்படிப்பினை படிக்கக்கூடிய நிலை உருவானது.

இன்று மாணவருக்கு இலவசப் புத்தகம் வழங்கப்படும் இத்தேசிய விழா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா சகலருக்கும் சம வாய்ப்பு அளிக்கும் முகமாகவே ஏழை-- பணக்காரன் என்ற பேதமின்றி இப்பாடப் புத்தகங்களை வழங்க முன் வந்திருக்கிறார். மாணவருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் கிடைப்பதால் பெற்றோருக்கு இருந்து வரும் சுமைகளில் ஒன்று குறைந்து விட்டது. எனினும் பெற்றோர்கள் தமது

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...



டில்கா வாச்வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி -
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## சென். பற்றிக்ஸ் புதிய அதிபர்

(புலோலி)

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக வண. பிதா. ஜீ. ஏ. எப். ஜோசப் அடிகளார் நியமிக்கப் பட்டுள்ளார். இளைப்பாறிய அதிபரான வண. பிதா. ஜே. ஏ. பிரான்சிஸ் அடிகளார் மிருசுவில் பதில் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## கவாஸ்கருக்கு பிரதமர் பாராட்டு

(சென்னை)

இந்திய-பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில், பாரதம் வெற்றிபெற்றதைப் பாராட்டி பாரத கோஷ்டியின் தலைவர் சுனில் கவாஸ்கருக்கு பாரதப்பிரதமர் திருமதி திருமதி இந்திராகாந்தி, இந்திய ராஷ்டிரபதி நீலம்சஞ்சீவரெட்டி, உப ராஷ்டிரபதி ஹிதாயத்துல்லா ஆகியோர் நேற்று வாழ்த்துச்செய்திகள் அனுப்பினர். தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று நேரில் சென்று பாராட்டி சான்றிதழ்களும் தலா ரூபா 2500 ரொக்கப் பரிசும் அளித்துக் கௌரவித்தார்.

# மறியல் இயக்கத்துக்கு பூரண ஆதரவு

## தமிழ் காங்கிரஸ்தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''விடுதலை நாட்கள் குறைக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்படும் மறியல் இயக்கத்துக்கு எதிராக வன்முறைகள் இடம் பெற்றதற்கு பலத்த கண்டனத்தைத் தெரிவிப்பதோடு மறியல் இயக்கத்திற்கு எமது பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றோம்'' என்று அ. இ. த. காங்கிரஸின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிஆர்.என்.சிவப்பிரகாசம். தலைமையில் நடைபெற்றது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

''பொதுச்சபை மிகவிரைவில் கூட்டப்படல் வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை பொதுச் செயலாளர் எடுக்க வேண்டும்,

''உள்ளூராட்சி சபைகளில் காங்கிரஸ் சார்பில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் கட்சியின் செயற்குழுவில் இடம்பெற வேண்டும் என கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொதுச் சபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் நகலியாப்பு பரிசிலனைக்கு எடுக்கப்பட்டு அடுத்த செயற்குழுக் கூட்டத்திற்கு இடையில் நகல்யாப்பு பூரணப்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது''.

அனலைதீவில்

## அமிருக்கு இன்று வரவேற்பு

(அனலைதீவு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்துக்கும் அனலைதீவு மக்கள் அளிக்கும் பொது வரவேற்பு விழா இன்றுமாலை நடைபெறவுள்ளது.

இவ்வரவேற்பு வைபவத்தில் ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், மன்னார் எம். பி. திரு. சூசைதாசன், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

# நாளை நடைபெறும் வியாபாரக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வியாபாரக் கருத்தரங்கு கொன்று நாளை செவ்வாக் கிழமை காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறும்.

வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில், யாழ்.மாவட்டத்தின் வர்த்தகர்கள், தொழில் நிறுவன அதிபர், கலந்து கொள்வதுடன், உதவி அரசாங்க அதிபர்கள், மாவட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுந்தாபனத்தின் பிரதிநிதிகள், கூட்டுறவு உதவி ஆணையாளர்கள், கூட்டுறவுச் சங்க தலைவர்கள் ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள். (கொ)

## பாதிக்காத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலையில் மிளகாய் கொடுக்க முயற்சிக்கவேண்டும்.

''உற்பத்திசெய்யப்படும் மிளகாயிலும் பார்க்க இறக்குமதி மிளகாய் விலைகுறைந்ததாக இருக்கிறது. என்றாலும் இலங்கையில் மிளகாய் உற்பத்திசெய்வதில் அதிக கஷ்டம் இராது. சிறந்த முறைகளைக் கடைப்பிடித்தால் இந்நாட்டிற்குத் தேவையான அத்தனை மிளகாயையும் உற்பத்திசெய்யலாம். ஆனால் பாவனையாளர்களை அவஸ்தைப்படும் நிலையில்விடக்கூடாது.

### நியாயவிலை என்ன?

''எது நியாய விலை என்ற கேள்வி எழுந்துள்ளது! முன்பு போல் 40 ரூபாவிற்கு மிளகாய் விலை ஏறாது. மிளகாய் கையிருப்பில் இருக்கிறது.

''அரசு உற்பத்தியாளர்களின் நன்மை கருதி, அமைச்சு, உற்பத்திசெய்யப்படும் அத்தனை மிளகாய்களையும் வாங்கவிருக்கிறது. ஆணைக்குழு விலைபற்றி முடிவு செய்யும்வரை நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அத்தனை மிளகாய்களையும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனமும், விற்பனை இலாகாவும் சேர்ந்து நல்லவிலைக்கு வாங்க வேண்டும் என்று உத்தரவிடுகின்றேன்.

### உற்பத்தியைக் கூட்டவேண்டும்

''இவ்விரு ஸ்தாபனங்களும் சேர்ந்து எவ்வளவு தொகையான மிளகாய்களை வாங்கலாம் என்று கணக்கு எடுக்கப்பட்டபின்னர்தான், மிளகாய் இறக்குமதியை நிறுத்துவது பற்றி ஆராயலாம். இறக்குமதி குறைய உற்பத்தியைக் கூட்ட வேண்டும். கூ. மொ. விற்பனை இலாகாவும், விற்பனை ஸ்தாபனமும், சேர்ந்து செயல்படும்போது இன்றுள்ள நிலைமை மாறிவிடும்.

### ஒரு சபை வேண்டும்

''யாழ். குடாநாட்டில் மிளகாய் உத்பத்தி செய்பவர்கள் அத்தனைபேரும் சேர்ந்து ஒரு சபையை உருவாக்கினால் அதன்மூலம் பல நன்மைகளைப் பெறமுடியும், பிரச்னைகளை இச்சபை ஆராய்ந்து செயல் பட்டால், அதனை இலகுவாக தீர்க்கலாம்.

''பாவனையாளரைக் காப்பாற்ற நத்வடிக்கை எடுக்கும் போது அதே நேரம், உற்பத்தியாளரையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுமிகவும் சிக்கலானதும் கஷ்டமானதுமாகும். இதை சமாளிப்பது இலகுவான வேலையல்ல. எந்த முடிவுநல்ல முடிவோ அந்த முடிவை எடுக்க ஆணைக்குழுவிற்கு பூரண அதிகாரம் உண்டு'' என்று கூறினார்.

### மாவட்ட அமைச்சர் கருத்து

யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயகோன் கூறியதாவது: ''யாழ். மாவட்டத்தில் மிளகாய் வெங்காய உற்பத்தி மிகவும் திறமையாக நடைபெறுகிறது.

''நாட்டிற்குத் தேவையான 60 வீதமான மிளகாயும், 90 வீதமான வெங்காயமும் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மருந்து வகைகள், உரம், பசளை ஆகியவற்றின் விலை கடந்த காலத்திலும் பார்க்க அதிகரித்துக்கொண்டு போகிறது. ஆணைக்குழு விசாரணை செய்து நல்ல முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன், விசாரணையை நடத்த இம்மண்டபத்தைத்தந்துதவிய சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

### எம்.பிக்கள் கருத்து

நல்லூர் எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் ''தற்போது உற்பத்திச்செலவு அதிகரித்துள்ளதால் லாபம் பெற முடியாத நிலை இருப்பதாகவும், நாட்டிற்குத் தேவையான மிளகாயை இங்கு உற்பத்தி செய்யமுடியுமென்றும் கூறினார்.

மற்ற உற்பத்திப் பொருட்கள் இவ்வளவாக அதிகரிக்வில்லையென்றும், வெளிநாட்டு இறக்குமதி மிளகாய் குறைந்த விலையாக இருந்தாலும் உள்நாட்டு உற்பத்தி மூலம் தொழில் வாய்ப்பு மற்றும் நன்மைகள் உண்டென்றும் அவர் கூறினர்'

பருத்தித்துறை எம். பி. திரு.கே. துரைரத்தினம் பேசுகையில் இந்நாட்டின் உற்பத்தி, எந்தவித உற்பத்தியாக இருந்தாலும் உயர்வாக கணிக்கப்படவேண்டு மென்று கூறினர். (க)

## தட்டுப்பாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடந்த இம்மாநாட்டில் அமைச்சர் திரு. அத்துலத் முதலி மேலும் கூறியதாவது:-

''தட்டுப்பாடு இல்லாமல் நியாயமான விலைக்கு நுகர்வோர்களுக்கு பொருட்கள் கிடைக்கவேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும்.

### அரசின் நோக்கம்

''நுகர்வோருக்கும் உற்பத்தியாளர்களுக்குமிடையில் அரசு நடுநிலைமைநின்று இருபகுதியினரும் பாதிக்காதவகையில் பணிபுரிவதே அரசின் நோக்கம்.

கூட்டுறவுச் சங்கங்களில் நியாயமான விலையில் தேவையான பொருட்கள் பங்கீட்டின் அடிப்படையில் அடிப்படையில் சகலருக்கும் கிடைக்க வேண்டும்.

''அரசின் கொள்கைக்கு அமையவே பாவனையாளர் சட்டத்தை கொண்டுவந்தோம். தனிப்பட்ட முறையில் வியாபாரிகளுக்கு எதிராக நீங்கள் செயல்படக் கூடாது. நீங்கள் ஒற்றுமையாகச்செயற்பட்டால் கடந்த ஒரு வருடத்தில் பெற்ற பெறுபேற்றிலும் பார்க்க கூடிய பயனைப் பெறலாம். மக்கள் வருங்காலத்தில் நல்ல பயனை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### சட்டத்தின் கீழ் நடவடிக்கை

''இச்சட்டத்தின் கீழ் 1800 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சமுதாயத்திற்கு நன்மையளிக்கும் விதத்தில் செயல்படவேண்டும்.ஒற்றுமையாக நீங்கள் செயல்படவேண்டும். அரசின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். நீங்கள் பாவனையாளர் இலக்கணத்தை படிப்படியாக முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்.

### யாழ். அரச அதிபர் கருத்து

யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறியதாவது: ''இங்கு வடக்கிலுள்ள 57 சங்கங்களின் உறுப்பினர்கள் சமூகம் தந்துள்ளார்கள். 57 சங்கங்களிலும், சுமார் 1500 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். உங்கள் பிரச்னைகளை தெரிவித்தால் அதனைத் தீர்க்க வேண்டிய நடவடிக்கைகள் எடுப்போம்'' என்றார்.

வர்த்தக கமிஷனர் திரு. என். இராமலிங்கம் பேசுகையில், பாவனையாளர் சங்கத்திற்கு, திணைக்களம்வேண்டிய உதவிகளைச் செய்யத் தயாராக இருப்பதாகவும், சில சங்கங்கள் துரிதமாக செயல்பட்டுள்ளதாகவும் சகலரும் ஒருமித்து செயல்படவேண்டுமென்றும் கூட்டுறவு விநியோகத்தில் உள்ள குறைபாடுகளை நீக்க தொடர்ந்து கடமையாற்றுமாறு கூறினார்.

சென்ஜோன்ஸ் கல்லூரி வாசலில், அமைச்சர் லலித் அத்துலத்முதலியும், அரசாங்க அதிபர் திரு, யோகேந்திரா துரைசுவாமியும் மாலைசூட்டி வரவேற்கப்பட்டு, மேளவாத்தியத்துடன் அலங்காரப் பந்தலின் ஊடாக, மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர். (க)

## அதிபர் டிட்டோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கால், நேற்று நடைபெற்ற இரண்டாவது சத்திரசிகிச்சைக்குப்பின்னர் அகற்றப்பட்டுவிட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

வழக்கமாக, நேற்றுப் பகல் வெளியிடப்படவிருந்த வைத்திய அறிக்கை குறிப்பிட்ட நேரத்துக்கும் அதிக நேரம் தாமதித்தே வெளியிடப்படும் என்று நேற்று பகல் ஒரு அறிவிப்பு வெளியானதை ஆதாரமாகக்கொண்டே மேற்படி செய்தி வெளியாகியுள்ளது.

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாசம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. GE/8948/78] The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org